

கழக இளைஞர் அணி செயலாளர், மாண்புமிகு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சேலத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு திண்டுக்கல் சென்றபோது நாமக்கல் மேற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் புக்கடை சுந்தரின் தாயார் புக்கடை தேவி அவர்கள் மறைவெய்திய நிலையில், அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார். ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன், மாவட்டக் கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில், நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் கே.ஆர்.என். ராஜேஸ்குமார் எம்.பி., ஒன்றிய, பேரூர், கழக செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.



திருப்பூர் மாவட்டம், தாராபுரம் நகராட்சி, திருப்பூர் சாலை வார்டு எண்.2ல் தூய்மை இந்தியா 2.0 திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட சமுதாயக்கழிப்பிடம் புதிய கட்டிடத்தை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் திறந்து வைத்தனர். இதில் தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் ஃபெலிக்ஸ்ராஜா, தாராபுரம் நகர்மன்றத் தலைவர் கு.பாப்புக்கண்ணன், நகர கழக செயலாளர் எஸ்.முருகானந்தம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தனசேகர், மாவட்ட துணை செயலாளர், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் பிரபாவதி பெரியசாமி, மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் வி.கமலக்கண்ணன், தாராபுரம் நகராட்சி ஆணையாளர் திருமால் செல்வம், நகராட்சி பொறியாளர் சுகந்தி உள்பட நகர்மன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

சேலம் மாவட்டம் – மேட்டூர், வீரக்கல் கிராமம் – கொத்திகுட்டை ஏரியில் மூழ்கி

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சேலம், அக்.24-

**சேலம் மாவட்டம், மேட்டூர், வீரக்கல் கிராமத்திலுள்ள கொத்திகுட்டை ஏரியில் மூழ்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் தெரிவித்துள்ளதுடன் நிதியுதவி வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு :-

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், வீரக்கல் கிராமம், கொத்திக்குட்டை ஏரியில் கடந்த (20.10.2024) அன்று நண்பகல் 12.00 மணியளவில் வீரக்கல் கிராமம், வீரக்கல் புது காலனியைச் சேர்ந்த திரு.சிவலிங்கம் என்பவரின் மகள் செல்வி.சிவநந்தினி (வயது 20), மகன் செல்வன்.சிவகிரி (வயது 10) மற்றும் திரு.முனுசாமி என்பவரின் மகள் செல்வி. திவ்யதர்ஷினி (வயது 14) ஆகிய மூவரும் துணிதுவைக்கச் சென்றபோது எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.



புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், நல்லூரில் ஒன்றியப் பொது நிதி திட்டத்தின்கீழ் ரூ.6 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய பயணியர் நிழற்குடையினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி அவர்கள் 19.10.2024 அன்று திறந்து வைத்தார். உடன் இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் அ.அக்பர்அலி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

பெரம்பலூர் மாவட்டம் வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில்

# ரூ.11.98 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப் பணிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்!

பெரம்பலூர், அக். 24 -

போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், பெரம்பலூர் மாவட்டம் வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் பல்வேறு பகுதிகளில் ரூ.11.98 கோடி மதிப்பீட்டில் பல்வேறு புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, ரூ.5 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட வேப்பூர் பேருந்து நிழற்குடையினை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சிகளில் போக்குவரத்துத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து ஏழை எளிய அடித்தட்டு மக்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், மக்களின் தேவைகளை உணர்ந்து, அவற்றை திட்டங்களாக வழங்கி வருகின்றார்.

பெரம்பலூர் மாவட்ட மக்கள் பயன்பெறும் வகையில் அரசின் திட்டங்கள் அனைத்து பகுதிகளிலும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது. பொது மக்களின் கோரிக்கைகள் மீது கவனம் செலுத்தி அவற்றை நிறைவேற்ற வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இன்று வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றும வகைளில் ரூ.11.98கோடி மதிப்பில் பல்வேறு புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, ரூ.5 லட்சம் மதிப்பில் வேப்பூரில் கட்டப்பட்டுள்ள பேருந்து நிழற்குடை மக்கள் பயன்பாட்டிற்காக தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

பெரம்பலூர் மாவட்டம் வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பெருமத்தூர் ஊராட்சியில் அயோத்திதாச பண்டிதர் திட்டத்தின் கீழ் ரூ.8.40 லட்சம் மதிப்பீட்டில் பெருமத்தூர் ஊராட்சி முனியன் வீடு முதல் பிள்ளையார் குளம் வரை கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணியினையும், ரூ.3.79 லட்சம் மதிப்பீட்டில் பெருமத்தூர் ஊராட்சி அம்பேத்கார் சிலை முதல் ஜோதி வீடு வரை கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணியினையும், மாவட்ட ஊராட்சி பொது நிதியின் கீழ் பரவாய் ஊராட்சியில் ரூ.5 லட்சம் மதிப்பீட்டில் பரவாய் ஆலமரம் அருகில் பேருந்து நிழற்குடை கட்டும் பணியினையும், ரூ.2 லட்சம் மதிப்பீட்டில் பரவாய் வள்ளுவ தெருவில் போர்வெல் மற்றும் மினி டேங்க் அமைக்கும் பணியினையும், பிரதான் மந்திரி கிராம் சதக் யோஜனா திட்டத்தின் கீழ் பெருமத்தூர் ஊராட்சியில் ரூ.144.57 லட்சம் மதிப்பீட்டில் மழவராயநல்லூர் முதல் காருகுடி, பெருமத்தூர் வரை தார் சாலை அமைக்கும் பணியையும்,

பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் ரூ.132.21 லட்சம் மதிப்பீட்டில் பெருமத்தூர் முதல் பெருமத்தூர் குடிக்காடு வரை தார் சாலை அமைக்கும் பணியினையும், முதலமைச்சர் கிராம சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பீல்வாடி ஊராட்சியில் ரூ.164.80 லட்சம் மதிப்பீட்டில் பேரளி முதல் பீல்வாடி வரை தார் சாலை அமைக்கும் பணியினையும்,

தலா ரூ.34 லட்சம் மதிப்பீட்டில் ஓலைப்பாடி மற்றும் திருமாந்துறை ஆகிய ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் கூடுதல் புதிய இரண்டு வகுப்பறை கட்டிடம் கட்டும் பணியினையும்,

வைத்தியநாதபுரம் ஊராட்சிக்குட்பட்ட ஆண்டிக்குரும்பலூர் ஊராட்சியில் ரூ.3.19 லட்சம் மதிப்பீட்டில் வைத்தியநாதபுரம் ஆதிதிராவிடர் தெரு மினி டேங்க் முதல் உடைசாயி வீடு வரை பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணியினையும், ரூ.4.19 லட்சம் மதிப்பீட்டில் வைத்தியநாதபுரம் ஆதிதிராவிடர் தெரு மினி டேங்க் முதல் பாலுசாமி வீடு வரை கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணியினையும்,

நன்னை ஊராட்சியில் ரூ.7.54 லட்சம் மதிப்பீட்டில் வேப்பூர் சாலை முதல் மாரியம்மன் கோவில் வரை சிமெண்ட் சாலை அமைக்கும் பணியினையும், ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் ரூ.305 லட்சம் மதிப்பீட்டில் நன்னை முதல் லெப்பைக்குடிக்காடு வரை ஒரு வழி பாதையை இருவழி சாலையாக தரம் உயர்த்துதல் பணியினையும், அசூர் ஊராட்சியில் ரூ.335.10 லட்சம் மதிப்பீட்டில் பெரம்பலூர் அரியலூர் சாலையில் இருந்து அசூர் வழியாக ஆய்க்குடி வரை செல்லும் சாலை அகலப்படுத்தும் பணியினையும், ரூ.5.22 லட்சம் மதிப்பீட்டில் அசூர் ஊராட்சி ஆதிதிராவிடர் காலனியில் வெள்ளையப்பன் டீ கடை முதல் ரேஷன் கடை வரை கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணியினையும்,

ரூ.9.25 லட்சம் மதிப்பீட்டில் ஆதிதிராவிடர் காலனியில் வெள்ளையப்பன் டீக் கடை முதல் ரேஷன் கடை வரை கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணியினையும் என மொத்தம் ரூ.11.98 கோடி மதிப்பீட்டில் 16 புதிய பணிகளுக்கு மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அடிக்கல் நாட்டினார். மேலும் மாவட்ட ஊராட்சி பொது நிதியின் கீழ் ரூ.5 லட்சம் மதிப்பீட்டில் வேப்பூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில் கட்டப்பட்ட பேருந்து நிழற்குடையினை மக்கள் பயன்பாட்டிற்கு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்து, மரக்கன்றுகளை நட்டு வைத்தார்.

இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் கிரேஸ் பச்சாவ் , ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சு.தேவநாதன், நெடுஞ்சாலைத்துறை கோட்டப் பொறியாளர் த.கலைவாணி, வேப்பூர் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் பிரபா செல்லப்பிள்ளை, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பா.துரைசாமி, அட்மா தலைவர் வீ.ஜெகதீசன், மாவட்ட ஊராட்சிக் குழு துணைத்தலைவர் முத்தமிழ்ச்செல்வி மதியழகன், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் டாக்டர் அ.கருணாநிதி, வேப்பூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் செல்வகுமார், பூங்கொடி, குன்னம் வட்டாட்சியர் கோவிந்தம்மாள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம்

# ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் அறிமுகக் கூட்டம்!

ரிஷிவந்தியம், அக். 24 -

திராவிட முன்னேற்ற கழகம் வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் தேர்தலுக்கான களப்பணியை செய்வதற்கு 234 சட்டமன்ற தொகுதிக்கும் தொகுதி பார்வையாளர்கள் நியமனம் செய்யப்பட்டு பல்வேறு பொறுப்பாளர்களை அறிவித்தனர், அதன் அடிப்படையில் திமுக கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் ச.அ.பெரு நற்கிள்ளி ரிஷிவந்தியம் தொகுதி பார்வையாளராக அறிவிக்கப்பட்டார்.

இந்நிலையில் பொதுப் பணி மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் எ.வா.வேலு வழிகாட்டுதலின்படி கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளருமான ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் தலைமையில் முதல் ஆலோசனை கூட்டம் வாணாபுரம் பகண்டை கூட்டு சாலையில் அமைந்துள்ள சட்டமன்ற அலுவலகத்தில் நடைபெற்றது, இதில் சிறப்பு அழைப்பாளராக ரிஷிவந்தியம் தொகுதி பார்வையாளர்,கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் ச.அ.பெரு நற்கிள்ளி கலந்து கொண்டார்.

அறிமுகக் கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ பேசுகையில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தை பொருத்த வரை நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் திமுக மற்றும் கூட்டணி கட்சிகள் வெற்றி பெறும், கழகம் யாரை வேட்பாளராக நிறுத்துகிறார்களோ அவர்களை வெற்றி பெற செய்ய நாம் அனைவரும் பாடுபட வேண்டும், அதேபோல் ரிஷிவந்தியம் தொகுதியில் கடந்த தேர்தலை விட இந்த தேர்தலில் அதிக வாக்குகள் வித்தியா சத்தில் வெற்றி பெற நாம் அனைவரும் ஒற்றுமையுடன் ஒன்றிணைந்து கடுமையாக உழைக்க வேண்டும், மேலும் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கும் கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் தேர்தல் பொறுப்பாளர் கூறிய அறிவுரைகளை கேட்டு தேர்தல் பணியே இன்றே தொடங்கி தேர்தலில் வெற்றி கனியை நமதுதமிழகமுதல்வர்,கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் என்று பேசினார்.

இந்த அறிமுகக் கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட ரிஷிவந்தியம் தொகுதியின் தேர்தல் பொறுப்பாளரும் மாநில கொள்கை பரப்பு துணை செயலாளருமான ச.அ.பெரு நற்கிள்ளி வருகின்ற 2026 ஆம் ஆண்டு நடைபெற இருக்கின்ற சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு கழகத்தினர் தேர்தல் பணி எவ்வாறு செய்ய வேண்டும், ஒன்றிய கழக செயலாளர்கள் அந்தந்த கிளைகளில் ஆய்வு கூட்டம் நடத்திட வேண்டும்,பாக முகவர்கள் இளம் வாக்காளர்களை அதிகளவில் கழகத்தில் இணைக்க வேண்டும்,தமிழக முதல்வர்,கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் நல்லாட்சியில் மக்களுக்கான திட்டங்களை எடுத்துக் கூறினாலே நாம் 200 தொகுதிக்கு மேல் வெற்றி பெற்று மீண்டும் ஆட்சி அமைக்க முடியும், ஆகவே கழக நிர்வாகிகள் இன்று முதலே தேர்தல் பணிகளை துவங்கிட வேண்டும் என்று அறிமுக கூட்டத்தில் பேசினார்.

இதனைத் தொடர்ந்து ரிஷிவந்தியம் ஒன்றியம் பாசார் கிராமத்திலிருந்து மாற்றுக் கட்சியை சேர்ந்த 100 பேர் கழகத்தில் இணைந்தனர் இவர்கள் அனைவருக்கும் மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ மற்றும் தொகுதி பார்வையாளர் ச.அ.பெருநற்கிள்ளி கழக வேட்டி மற்றும் சேலை அணிவித்து அன்புடன் வரவேற்று வாழ்த்து தெரிவித்து கழகப் பணியை சிறப்பாக செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.

இந்த கூட்டத்தில் ரிஷிவந்தியம் ஒன்றிய கழக செயலாளர்கள் பெருமாள், பாரதிதாசன், துரைமுருகன், திருக்கோவிலூர் ஒன்றிய கழக செயலாளர்கள் ராஜேந்திரன், அய்யனார், கிருஷ்ணமூர்த்தி, சங்கராபுரம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் அசோக் குமார், மணலூர் பேட்டை பேரூர் கழக செயலாளர் ஜெய் கணேஷ், மாவட்ட கழக துணை செயலாளர் அண்ணாதுரை, மாவட்ட பொருளாளர் கோவிந்தராஜ், மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் ராஜேந்திரன்,ராஜி, கணேசன், ரிஷிவந்தியம் ஒன்றிய குழு பெருந்தலைவர் வடிவுக்கரசி சாமி சுப்பிர மணியன், மாவட்ட கவுன்சிலர்கள் ராஜேந்திரன், ஜெய்சங்கர்,அமிர்தம் ராஜேந்திரன்,மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் கே.கே.ஆர்.ராஜீவ் காந்தி, பாலாஜி பூபதி, உதயா மற்றும் ரிஷிவந்தி யம் தொகுதிக்கு உட்பட்ட கழக நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

அமைச்சர் செந்தில்பாலாஜி தலைமையில் – கோவை மாவட்டத்திற்குட்பட்ட

# தொகுதி தேர்தல் பொறுப்பாளர்கள் அறிமுகக் கூட்டம்!

## நா.கார்த்திக் – தொ.அ.ரவி – தளபதி முருகேசன் அறிக்கை!



கோவை, அக் 24 -

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்ட கோவை மாவட்டத்திற்கு உட்பட்ட தொகுதி தேர்தல் பொறுப்பாளர்கள் அறிமுகக் கூட்டம் தமிழ்நாடு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தலைமையில் நடைபெற உள்ளது.

இது குறித்து மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா. கார்த்திக் வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் அறிவிப்பு வருமாறு:

நாளை ( 25.10.2024 - வெள்ளிக்கிழமை) மாலை, தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்ட கோவை மாவட்டத்திற்கு உட்பட்ட தொகுதி தேர்தல் பொறுப்பாளர்கள் அறிமுகக் கூட்டம் தமிழ்நாடு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அவர்கள் தலைமையில், கீழ்க்கண்ட நேரங்களில், கீழே குறிப்பி டப்பட்டுள்ள இடங்களில் நடைபெற உள்ளது.

தெற்கு மாவட்ட திமுக மாலை 3.00 மணி SNK கல்யாண மண்டபம், தலைவர் கலைஞர் சிலை அருகில் ஊஞ்சபாளையம் பிரிவு கருமத்தப்பட்டி வடக்கு மாவட்ட தி.மு.க. மாலை 4.30 மணி

எஸ்.எம்.எஸ்.மகால் சரவணம்பட்டி மாநகர் மாவட்ட தி.மு.க. மாலை 5.30 மணி அவினாசி சாலையில் உள்ள ஜென்னிஸ் ரெசிடன்சி டைமண்ட் அரங்கம்.

அதுசமயம், நாடாளுமன்ற தொகுதி உறுப்பினர்கள்,தலைமைக் கழக நிர்வாகிகள், கோவை மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள்,மாநகராட்சி மேயர், துணை மேயர்,தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிக் கழக, ஒன்றியக் கழக, பேரூர்க்கழக, மாநகர் வட்டக் கழகச் செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் தவறாமல் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறோம் என நா.கார்த்திக் (மாவட்டச் செயலாளர் மாநகர் மாவட்ட தி.மு.க.)

தொ.அ.ரவி, (வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர்)

தளபதி முருகேசன் (தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர்) ஆகியோர் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.



மாநில தீர்மானக்குழு உறுப்பினரும் , தமிழ்நாடு உடல் உழைப்பு தொழிலாளர்கள் நலன் மற்றும் சமூக பாதுகாப்பு நலவாரிய உறுப்பினருமான செஞ்சி சிவா இல்ல திருமண விழாவில் மணமக்கள் தியாகராஜன் – ஷர்மிளா ஆகியோரை விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் டாக்டர். பொன்.கௌதமசிகாமணி வாழ்த்தினார். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, முன்னாள் ஒருங்கிணைந்த மாவட்ட துணைச் செயலாளர் வழக்கறிஞர் அசோகன் உயர்நீதிமன்ற வழக்கறிஞர் கே.வி.சிட்டிபாபு, ஒன்றியச் செயலாளர்கள் வல்லம் அண்ணாதுரை, துரை ,மயிலம் செழியன், மாவட்ட கவுன்சிலர் அன்பு செழியன், சசிகலா மோகன சுந்தரம்,மாவட்ட பிரதிநிதிகள் திருநாவுக்கரசு,கண்ணன் , துணை செயலாளர் ராஜலிங்கம்,முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சரவணன் ,பெரும்புகை ஊராட்சி மன்ற தலைவர் சௌந்தரராஜன், ஏதா நெமிலி ஊராட்சி மன்ற தலைவர் ரவிச்சந்திரன், ஒன்றிய கவுன்சிலர்கள் கண்ணன், முருகன், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் பெருமாள் , தொட்டி சங்கர், விஜயராகவன் திண்டிவனம் வார்டு கவுன்சிலர் பார்த்தீபன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் பெருவளூர்ஊராட்சியில் கட்டப்பட்ட புதிய நாடக மேடை கட்டிடத்தினை செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன் ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், சாந்தி சுப்பிரமணியன், உள்ளனர்.